04.07.2025

OS No: 567/2019

பி.வா.சா.1 திரு.பாஸ்கர் , த/பெ. சித்திரன்

**வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

நான் விசிக என்ற அரசியல் கட்சியில் என்ன பொறுப்பில் உள்ளேன் என்றால் மாவட்ட பொருளாளராக உள்ளேன். வாதிகள், பிரதிவாதிகளை தெரியுமா என்றால் பெருமாள் என்பவர் வாதி ஆவார், மாதவன் என்பவர் பிரதிவாதி ஆவார், அவ்வளவு தான் எனக்கு தெரியும். தாவா சொத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் தெரியாது. தாவா சொத்திற்கு யார் பெயரில் பட்டா உள்ளது என்றால் ஆதியில் குஞ்சரம்மாள் பெயரில் இருந்தது, தற்போது யார் பெயரில் உள்ளது என்று தெரியாது. குஞ்சரம்மாள் மக்களைத் தவிர தாவா சொத்தில் வேறு யாருக்கு பாத்தியம் என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியாது. மாதவன், பெருமாள் ஆகியோர் உயிருடன் உள்ளார்களா என்றால் இறந்துவிட்டார்கள். மாதவன், பெருமாள் இறந்துவிட்ட பிறகு தாவா சொத்தை யாரெல்லாம் கூட்டாக அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் தெரியாது. மாதவனுக்கு வேறு ஏதேனும் சொத்து உள்ளதா என்றால் ஊரில் உள்ளதாக என்னிடம் சொல்லியுள்ளார். குஞ்சரம்மாள் மகன்கள் மாதவன், பெருமாள் ஆகிய இருவருக்குள் தாவா சொத்து யாருடைய பாகத்திற்கு கிடைத்தது என்றால் தெரியாது. வழக்கைப் பொறுத்து சங்கதிகள் எதுவும் எனக்கு தெரியாது என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை** இல்லை.

R Pandy

Digitally signed by R Pandy
Date: 2025.07.04 17:53:38 +0530